021 ப-வ 108/17
3.1.18

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) (பொ)அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர். திரு.வ.முருகானந்தம், பி.பி.ஏ.,

ந.க.அ8/5052/2016

நாள்: 22 .12.2017

03 JAN 2018 திருவாடானை

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலகு - தொகுதி IV 2013-2014 மற்றும் 2014-2015ம் ஆண்டிற்கான காலியிடம் பூர்த்தி செய்வது - இரண்டாம் கட்டம் தட்டச்சர் பணியிடம் வரப்பெற்றது - பணி நியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

படிக்கப் பட்டவை

1. அரசாணை எண் 191 பொது(பணிகள்-அ) துறை நாள்: 01.02.1962.
2. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண் 887/PSD-F/2016, நாள்: 20.01.2016
3. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண் 887/PSD-F/2016, நாள்: 02.09.2016
4. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க. அ3/5052/2016, நாள்: 13.01.2016
5. திருவாடானை வட்டாட்சியரின் ந.க.அ4/108/2017 நாள்:28.01.2017

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2013 - 2014 மற்றும் 2014 - 2015ம் ஆண்டு நடைபெற்ற தொகுதி IV -ற்கான தட்டச்சர் பணியிடத்திற்கு இரண்டாம் கட்டமாக நேரடி நியமன தட்டச்சராக தேர்வு செய்யப்பட்டு பார்வை - 3 ல் காணும் கடிதத்தின் வாயிலாக இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை -4ல் காணும் செயல்முறைகளின்படி பணிநியமனம் வழங்கப்பட்டுள்ள திருமதி.ப.சிவகாமி என்பவரது பணி அவர் திருவாடானை வட்டாட்சியர் அலுவலகத்தில் தட்டச்சராகப் பணியில் சேர்ந்த நாளான **25.01.2017 முற்பகல் முதல் தட்டச்சர் நிலையில் வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.**

பார்வை -2ல் காணும் சென்னை அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் கடிதத்தின்படி 2013-2014 மற்றும் 2014-2015-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதி-IV தட்டச்சர் பணிக்கான தேர்வில் தேர்ச்சி பெறாதவர்கள் தொடர்ந்த வழக்கு சென்னை மற்றும் மதுரை கிளை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள ரிட் மனுக்கள் மீதான இறுதியாணைக்கு உட்பட்டு ("The regularization is subject to the outcome of the W.Ps pending on the files of the Honourable High Court of Madras/Madurai Bench of the Honourable High Court, Madras" - relating to Group-IV Services 2013-2014 and 2014-2015 recruitment) தனியரது பணி வரன்முறைப்படுத்தப்படுகிறது.

3. தனியரின் பணிப்பதிவேட்டில் பணிவரன்முறை தொடர்பான பதிவு மேற்கொள்ளப்பட்டது எனச் சான்றளிக்கப்படுகிறது.

ஒம்/-வ.முருகானந்தம்,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது)(பொ),
இராமநாதபுரம்.

/உ.ப/

27/12/17
அலுவலக மேலாளர்(பொது)

27.12.17

பெறுநர்:

சம்பந்தப்பட்ட நபர்

நகல்: வட்டாட்சியர், திருவாடானை.

நகல்: வருவாய் கோட்டாட்சியர், இராமநாதபுரம்.

நகல்: முக்கிய ஆணை தொகுப்பிற்கு.

உபரி: 1

Sub-Divisional Executive
Magistrate and
Revenue Divisional Officer,
VELLORE-632 009.